[illegible]

உ

சிவமயம்.

ஹரிஹர குஹ பஜனை

பக்த்திரச் கீர்த்தனைகள்

இவை

கும்பகோணம் புத்தகஷாப்

ஆர். கோவிந்தசாமி நாயுடு அவர்களால்

இயற்றியது.

மேற்படியார் காரியம்

கிருஷ்ணராஜு அவர்களாலும்

நா. சுப்பையா பிள்ளையாலும்

சென்னை,

சாஸ்த்ரஸஞ்ஜீவினீ அச்சியந்தரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

1923. [அணா-2.

உ

சிவமயம்.

ஹரி ஹர குஹ பஜனை.

விநாயகர் துதி.

விருத்தம்.

அரிதற்கரிய மாமுகவ னடியைப் பணிந்து அன்புடனே
னெரியிற்படிய அகமுருகி நிமலன்பதத்தை நேசமுடன்
தெரியத் தொழுதற்குன் னருளேதே நாரமூர்த சிவக்கொழுந்தே
அரியுமரனின் குஹபஜனை அடியேன்புகல வருள்செய்வீரே.

விநாயகர் ஸ்தோத்திரம்.

—o—

ராமமகி பிரணதபால யென்றமெட்டு.

கருணைபுரியும் கரிவதனு
கார்க்கவேணும் மிதுசமயம் (கருணை)

முருகனுக்கருள் புரியும் பாதர்
மூர்த்தியே முதன்மையானவா (கருணை)

அங்குசபாசமுடைய ஆகுவின் வாகனனே
யெங்கும்பிரகாசமான எவற்குமுதலானவனே (கருணை)

மத்தகஜமாமுகனே மாதேவன் புத்திரனே
இத்தருணமிங்குவந்து எளியேனுக்கருள்புரியும் (கருணை)

வாராய் வல்வினையைத்தீர்க்க வல்லபைதன்னுடனே
நாராயணசாமிபணியும் நாதனே பொற்பாதனேவந்து (கருணை)

நாதநாமகிரியை-ஆதிதாளம்.

செந்தமிழ் உலகினில் வந்திட்டகந்தனே—உன்
செந்தாமரை பொற் பாதமே—துதிக்கும் யென்மேல்
வந்தெதன் பிடிவாதமே (செந்த)

—முடுகு—

திருவருள் புரிந்திடு மரிதிரு மருக—னே
கருணைக்கடலே பெருமன துயர—மதை

தீர்க்கவே யாருண்டெனக்கு
யெந்தன்ஸ்ரீமீதினில் சித்தமிரங்காதுனக்கு (செந்த)
பாவியசுரர்களு மேவித்திரண்ட—தேவ
சாவில்லையுந்தரிக்க வில்லை யா—குறத்தி
யெனநகேலியை சேர்க்கவில்லையா

—முடுகு—

பகையென் அசுரரை அகமதில் நினைத்திடு
மிகழு பரம குரு வாகியதேசிக
பண்டிதனுன மெய்யனே—உனதுபத
மண்டினேன் காருமெய்யனே (செந்த)
தந்தைக் குபதேசி—த்த
மந்திர நிலையறி—ந்த
சற்குமரேசா கொஞ்சமோ
பிள்ளைக்கு தந்தை தந்திடா தென்னவஞ்சமோ

—முடுகு—

தத்தளித்திடுமெனை சித்தமுமிளகியே
மத்தமுமடைந்திடு பித்தனை காத்திட
நீ மறந்தாலு மன்னையை
தேடிடா பிள்ளை தானுமண்டோவதன்னையே (செந்த)
ஷண்முகாவென்று உன்னை நாராயணசாமியு
முன்னை னினைக்க வில்லையா
அதை யறிந்து தயவு முனக்குயில்லையா

—முடுகு—

அங்கமு முறுகிட சங்கீத சாகித்திய
மெங்குமே இசையுடன்
பொங்குமுடனே பாடும்
சங்கரன் மைந்தனே—நேசா
யெங்கள் வினையை மங்கிடாசெய்திடும் வாசா (செந்த)

சுவாமிநாதன் துதி

செந்தமிழ் உலகினில் என்றமெட்டு.

காவேரிநதி வட கரையில் சுவாமி மலையில்
கருணை புரியு மய்யனே—முருகய்யனே
கார்த்திகேயனே மெய்யனே

—முருகு—

கதிரவன் புன்பனி சருகின தொரு பொருள்
வருகிற வல்வினை வய்யக மீதினில்
திக்குவேறில்லை அய்யனே
திருவேரகத்தில் தெரிசனம் தந்தவனே
மைக்குழல் வள்ளியிடம்
நக்குவமாக வந்த மெய்க்குரு
ஞாத கந்த னே யிது சமயம்
அப்பனே வந்து யெந்தனை (காவே)
தங்க மயமுடைய பொங்கும் பால் காவடிகள்
தங்கமுன் சந்நி தியிலேவந்து கடன
மெங்கு முலவு மயிலே

—முருகு—

திரி புர மதை யொரு நொடி தனி லெரி கொடு
பரிவுடனவுணர்கள் திரணமதிலழிய
செய்தவன் சேயனே முன்னே
இது சமயம் கைவிட லாகுமோ யென்னை
அய்யமில்லாத அயன்
செய்தபிழைக்கி ச்சிரம்
கோய்தோன்திரு க்குமரனே
பைய்ய வந்தெ ன்னை
மெய்யாக காரும்பரனே (காவே)

பாலபிஷேகமதைப் பார்க்க
அமரர்களும் பந்தி பந்தி யாக்கூடியே
வந்திருக்கிறார் கந்தனின் செயல் நாடியே

—முருகு—

குரகத சுர மணி வனிரத கடவிய—மரகதமயி
லினில் வரு குரு பரனே
சரணம்செய் தேனே சண்முகா
சற்குரு பர ஞதனே சர்வமே மகா
கோடி அலவுகளை கூடி மெய்
முழுதினும் நாடிய காவடிகளும்
வந்திருக்குதே ஓடிவந்திடு யிப்போதே (காவே)

சந்தனக்குழம்பு பஞ்சாமிருதம் விபூதியும்
தந்திடுவார்கள் நாட்டம்
யெப்போது முந்தன் சந்நிதி திருக்கூட்டம்

—முடுகு—

சந்தத மரசர்கள் சிந்தையின் துயரா வந்திடும்
சந்தடி கந்தனின் சேவடி
சேவித்திருக்கும் நாயேனை
யெந்தனுடைய ஆவித்துணையுமானோனே
மேவிய நாரயணசாமி கைதொழுதேனே
தாவியுன் பொன் னடிதன்னை
தந்து ரக்ஷியும் தற்சம யத்தினிலென்னை (காவே)

பண்டரிநாதன் துதி.

செந்தமிழ் உலகினில் என்றமெட்டு.

பண்டரி புரமதை கண்ட அடியவற்கு
தொண்டுபுரிய வேணுமே
யென்றுமெல் லோருமின்று
பஜனை செய்வோமே

—முடுகு—

அண்டர் முனிவர்களும் பண்டரி புரமதை
கண்டவர் களிடமும் சண்டனு மணுகிடா
னென்று சொல்லுதே வேதங்கள்
அதையறிந்து சென்றிட லாகும் வாருங்கள்
மன்றில் கடனமிடு கின்றேன் குறை தவிர்த்து
கின்ற செடுமா லவனே திருவணையும்
சென்றுகாத்திட்டிலேனே (பண்டரி)
பண்டரிநாதனுக்கு தொண்டன் விட்டோபாவிற்கு
யென்றுமழியா பதமே கொடுத்தவனை
சென்றுபணிவோம் தினமே

—முடுகு—

அருமனாகளு முறை இடுகிற பொருளோது
கருமுகில் நிரமுளதென் ஒருதனிவரும்

ஆதாரமானவன்னீயே
அடுஸமக்குர்தன் பாதாரவிந்தம் கெதியே (பண்டரி)
சிரதாமூலகினில் நாராயணசாமிக்கு
வெரோகெதியுமில்லே—யே
இப்போதெனக்குயாரும் துணையுமில்லே (பண்டரி)

விஷ்ணு தோத்திரம்.

தாதாபாய் நவரோஜி—என்றமெட்டு.

ரா ரா ஸ்ரீ ராகவனே—ரா ரா
நாராயணனே நிராமயமானவா
பாராயணமுடையோர் நேசக வந்தவனே
ஆராவமுதனே கோறியதிரௌபதை
சிருடன் துகிலே மாராதளித்தவா (ரா ரா)

துகையறு.

ஆதிமூலமென்றழைத்த குஞ்சரமதற்
கபயம்கொடுத்தவனும் நீ
அன்றுபுவியாவையும்
மூன்றடியாகவு மளந்துநின்றவனும் நீயே
அண்டர் கட்கபயம்தந்த
ஆனந்த ராகவனே
அன்றுதசரதர் கொண்டாடும் யாகத்தை
கண்டவதாரம் செய்னின்றபரமனே (ரா ரா)

கௌசிகரின் யாகமதை
காத்துனின்ற கண்ணனே வா
தபசைகெடுத்த தாடகையை
தடுத்து உயிரைக்கவர்ந்தவனே
சத்துமிதிலேயில் உத்தமி சீதையை
பத்திமணம்புரி நித்தியமானவா (ரா ரா)

பாசுராமன் கெற்வமதை
பங்கம்செய்த பார்த்திபனே
அரசநீதி தவறிடா
திவ்வகிலமுழுதும் ஆண்டவனே
சித்தினிஅகல். யை
பத்தியசாபத்தை னத்திய உத்தமராமனே (ரா ரா)

வஞ்சகியின் கூனியினல் வனமீதில்சென்றவனே
தஞ்சமென்ற பரதனுக்கு தந்திர்பாதுகைகொடுத்தவனே
அஞ்சுகம்போல்மொழி
பஞ்சையுமாகிய தஞ்சம் நாராயணசாமிக்கிரங்கியே (ரா ரா)

திருமால் துதி.

செந்தாழம்பூ என்றமெட்டு.

வெண்தாழம்பூசூழ்ந்திமோ திரு
வேங்கடமலை—வாசனே
மந்தாகினி அலமேல்
மருவினின்ற மாதவனே
செந்தாமரையின் பாததெரிசனம்
தந்திடுமெந்தனே வந்தாதரியும் (வெண்தா)

நித்யகல்யாணசுந்தர
நேசனே பிரகாசனே
அத்திக்கபயம் தந்த
ஆருவமுத்தனுன்னை
பத்தியதாகவுனத்திடு மென்னையு
சித்தமகிழ்ந்தருள் உத்தமன்வாள்விடம் (வெண்தா)

பஞ்சவற்குதூதுசென்ற பரமனே
திருமார்பனே
தஞ்சமென்றகபிலமுனி யை
தற்காத்துனின்றவனே
அஞ்சுகமுலவும் கஞ்சமுன்பதத்தை
தஞ்சமென்றடைந்தேன்
செஞ்சரண ? மதை (வெண்தா)

சுத்த பிரணவ தாரகமந்திர
உத்தம புருஷோத்தமா
சத்துசித்தானந்த நித்யபரம்பொருளே
சுத்தனே நின்பதம் நித்தமும்பணியும்
பத்தன்நாராயணசாமிக்கிரங்கிடும் (வெண்தா)

திருப்புகழ்

நாதவிந்துகலாதி நமோ நம
வேதமந்தரசோரூபா நமோ நம
ஞானபண்டிதசாமி நமோ நம வெகுகோடி

நாமசம்புகுமாரா நமோ நம
போகஅந்தரிபாலா நமோ நம
நாகபந்தமயூரா நமோ நம பரசூரர்

சேததண்டவிநோதா நமோ நம
கீதகிண்கிணிபாதா நமோ நம
தீரசம்பிரமவீரா நமோ நம கிரிராஜ

தீபமங்களஜோதி நமோ நம
தூயஅம்பலலீலா நமோ நம
தேவகுஞ்சரிபாலகா நமோ நம அருள்தாராய்

ஈதலும்பலகோலாலபூஜையு—ம்
ஓதலுங்குணஆசாரநீதியு—ம்
ஈரமுங்குருசீபாதசேவையு மறவாத

ஏழ்தலம்புகழ்காவேரியால்விளை
சோழமண்டலமீதேமனோகர
ராஜகெம்பீரநாடாளுநாயக வயலூரா

ஆதபம்பயிலாரூரர்தோழமை
செந்தல்கொண்டவரோடேமுனாளினில்
ஆடல்வெம்பரிமீதேறிமா கயிலையிலேகி

ஆதியந்தவுலாவாசுபாடிய
சேரர்கொங்குவைகாவூர்நனாடதில்
ஆவினன்குடிவாழ்வானதேவர்கள் பெருமாளே

உமையவள் துதி.

திருப்புகழ்.

ஆசிசுந்தரிமாயி நமோ நம
தேவிமந்திரரூபி நமோ நம
தாயிமாசிவகாமி நமோ நம அருள்வாயே

பஞ்சசாயகிபாகி நமோ நம
தஞ்சமுன்பதம்தாயே நமோ நம
கஞ்சமேவியகாமி நமோ நம அபிராமி

சங்கரிசிவபங்கி நமோ நம
மங்கைமாதவிமாதே நமோ நம
திங்கள்சூடியோன்தேவி நமோ நம ஜெகமீதே

நித்தியபூரணிநேமி நமோ நம
சத்தியவாசகிதாயி நமோ நம
உத்தமேஸ்பரிஒளியே நமோ நம உனைதேடி

காலகாளிகபாலி   நமோ நம
நீலிநிர்மலிநீயே   நமோ நம
சூலிசுள்வெளிதூற்கா   நமோ நம   துணைநீயே
வாலையோகசுரூபி   நமோ நம
கோலமாதிருசூலி   நமோ நம
ஆலமேவுமதிரூபி   நமோ நம   அடியேனே

சுப்பிரமணியர் துதி.

ராரா ஸ்ரீராகவனே என்றமெட்டு.

வாவா மயீன் மீதேரி
வந்தருள்   தந்திடு
மிந்த   சமயத்தில்   (வா வா)
மாமுனிஅசஸ்த்தியற்கு
மந்திரஉபதேசம்செய்த
சோமசேகரனுக்குபிரணவத்தின்
நாமமுறைத்தகுற்றவபாலனே   (வாவா)

திகையரு.

மூலமூதலாதாரமூர்த்தியாகி
மூதுமறையோர்போற்றுகின்ற முதலே   (வாவா)
பாதிபிறைதரித்தோன்
பரமனருளால்வளர்ந்த
மந்திரபூரண சந்திரசேகரன்
மைந்தனேவந்தருள்கந்தனேநீயும்   (வாவா)
ஆருபடைவீடமர்ந்த
ஆருமுகதேசிகனே
கோருமருணகிரிதிருப்புகழ்
சீரதனையும்செவியில்கேட்டிடும்
சீரியமயிலும் மேருவுமதிர
பாரினிலசுரர்வேரையருத்தவா   (வாவா)
முச்சுடரு   மானசிவ
சற்குருவு   மானவனே
இச்செக   மீதினில்
பக்ஷமதாகவே   மெச்சிடும்
நாதாயுணர்[illegible]   இரங்கி   (வா வா)

முற்றிற்று.

விளம்பரம்.

கும்பகோணம் ஆர். கோவிந்தசாமி நாயுடு புத்தக ஷாப்பில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், சோதிடம், வைத்தியம், நாவலர், புஷ்பரதசெட்டியார் புத்தகங்களும், ஆகம சாஸ்திரங்களும், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய புத்தகங்களும் விலே சரசமாய்க்கிடைக்கும்.

இன்னும் சுகந்த பரிமள விநோத அருமையாகிய வாசனைப் பொடியும் கிடைக்கும். இந்தப்பொடியை குழந்தை முதல் விருத்தர்வரையில் பசும்பாலிலாகிலும், சுத்தஜலத்திலாகிலும், ஒரு சிட்டிகைத்தூள் போட்டு மேலுக்குத் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால், அவரவர்களுக்கு சரீரத்திலுள்ள வியாதிகள் யாவும் நீங்கிவிடும். இதைப்பத்தி விசேஷித்து நான் எழுதவேண்டுவது அனுவசியம். இதைவாங்கி அனுபவித்து சுகமடைந்தவர்கள் அநேகம் பேர் நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.